**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 266/2022**
**நாள் 09/01/2026 வெள்ளிகிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – பிரபு | த/பெயர் – சௌந்தராஜன் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

நான் இந்த வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். 01.02.2022 தேதியிட்ட விபத்து பதிவேட்டின் நகல் **எ.ம.சா ஆ 1** ஆகவும், 21.02.2022 தேதியிட்ட விடுவிப்பு அறிக்கை **எ.ம.சா ஆ 2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. விபத்து குறித்து எனக்கு நேரடியான விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். நிறுவனம் சார்பாக நடத்தப்பட்ட கலப்பனி சார்ப்பில் விபத்து எவ்வாறு ஏற்ப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்கூறிய கலப்பனி ஆய்வு அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள விபத்து பதிவேட்டில் மனுதாரர் வழுக்கி விழுந்து விபத்து ஏற்ப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் அது சம்மந்தமாக காவல் துறையை அழைத்து விசாரணை செய்யப்பட்டதா என்றால் இல்லை.

மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா ஆ 8 இறுதி அறிக்கையில் மனுதாரர் வழுக்கி விழுந்ததால் மேற்படி விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2. விபத்தை ஏற்படுத்தியதாக கூறும் வாகனம் எங்கள் நிறுவனத்தில் தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள காரணத்தில் நாங்கள் தான் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் கூறியது போல் வழுக்கி விழுந்ததால் காயம் ஏற்படவில்லை என்றும், எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட 1ம் எதிர்மனுதாரரின் டாடா ஏஸ் வாகன ஓட்டுநரின் கவனங்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அதனால் மனுதாரர் இழப்பீடு பெற தகுதியானவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**